Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

மின்னும் வைரங்களுக்கும்
தங்கப்பவுண் நகைகளுக்கும்
AKS
போன்: 518
நகை மாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

ஈழநாடு
THE EELA NADU
தேசிய தினசரி National Tamil Daily
மலர் 9 (2-1-67) இதழ் 323
பராபவ ஹிமீ ரம்ழான் 20 மார்கழி 18 திங்கட்கிழமை

எழில் மிகுந்த
முத்து வளையல்
பிளாஸ்டிக் வளையல்
றப்பர் வளையல் முதலியவற்றிற்கும்
நவீன முத்துமாலை
முடிமயிர் வகைகளுக்கும்
ஜீவா பாங்கிள்ஸ் ஸ்ரோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# வடபகுதி மீன்பிடித்துறை அமைப்பு வேலைகள்

# விரைவில் பூர்த்தியாகும்

## டின் மீன் தயாரிக்கவும் திட்டம்

கொழும்பு, ஞாயிறு

மீன்பிடித் தொழிலை விருத்திசெய்யும் பொருட்டு வடபகுதியில் அமைக்கப்படவிருக்கும் மீன்பிடித்துறை முகங்களில் காங்கேசன்துறை மீன்பிடித்துறைமுகம் இவ்வருடம் பூர்த்தியடைந்துவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

வெளிநாட்டு உதவியுடன் மீன்பிடித்தொழில் விருத்திக்கென அமைக்கப்படவிருக்கும் மீன்பிடித்துறைமுகத்தின் வேலைகள் பூர்த்தியடையும்போது மீன்களை டின்களில் அடைக்கும் தொழிற்சாலையொன்றும் அமைக்கப்படவிருக்கிறது. பத்து லட்சம் ரூபாய் செலவில் மீன்பிடித்துறை அபிவிருத்தியும் மீன்களை டின்களில் அடைக்கும் தொழிற்சாலை அமைப்பும் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

---

காரைநகர், திங்கள்

காரைநகர் மணற்காட்டு மாரியம்மன் ஆலயத்தில் இன்று மாலை 6 மணிக்கு நல்லைஞானசம்பந்த ஆதீன கர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் பிரசங்கம் செய்வார். ஆதீனமாணவர்களின் திருமுறை ஓதலும், சொற்பொழிவும் நடைபெறும்.

## கிரிக்கெட் மைதானத்தில் காலிகள் அட்டகாசம்

### கல்கத்தா 'டெஸ்ட்' ஆட்டம் கைவிடப்பட்டது

கல்கத்தா, ஜன. 1

மேற்கிந்தியக் கிரிக்கெட் கோஷ்டிக்கும் இந்தியக் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் இன்று கல்கத்தாவில் ஆரம்பமான, இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் சில காலிகளின் அட்டூழியச் செயல்கள் காரணமாக கைவிடப்பட்டது.

விளையாட்டு மைதானத்தில் பார்வையாளர் கலரி தீவைக்கப்பட்டது. பொலிசார் உட்பட பலர் காயமடைந்தனர். இராணுவமும் உதவிக்கு அழைக்கப்பட்டு நிலைமை கட்டுப்படுத்தப்பட்டது.

இரண்டாம் நாள் ஆட்டம் இன்று காலை ஆரம்பமானதும் மைதானத்தின் கிழக்குப்பாதை வழியாக ஒரு கூட்டத்தினர் 'திமுதிமு' வென உள்ளே நுழைந்தனர். இவர்களைக் கட்டுப்படுத்தப் பொலிசார் எத்தனித்தபோது தகராறு மூண்டது. கூட்டத்தினர் பொலிசார் மீது கற்களை வீசியதுடன் மைதானத்தில் போடப்பட்டிருந்த நாற்காலிகளை வீசி உடைத்தும் மற்றும் சேதங்களையும் ஏற்படுத்தினர். நிலைமையைச் சமாளிக்க பொலிசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர். எனினும் மைதானத்திலுள்ள பொருட்களுக்கும் பார்வையாளர் கலரிக்கும் கூட்டத்தினர் தீவைக்கத் தொடங்கினர். இதன் பின் இராணுவமும் உதவிக்கு அழைக்கப்பட்டு நிலைமை கட்டுப்படுத்தப்பட்டது.

இக்கலகம் காரணமாக கிரிக்கெட் ஆட்டம் கைவிடப்பட்டது.

---

பூரிசங்கராச்சாரியார்

## தீர்த்தத்தையும் கைவிடுவாராம்

புதுடில்லி, ஜன. 1

தனது கோரிக்கைகளுக்கு அரசாங்கம் இணங்காது போனால் அடுத்த ஞாயிற்றுக்கிழமை முதல் கங்கா தீர்த்தம் அருந்துவதையும் கைவிடப் போவதாக பூரிசங்கராச்சாரியார் அறிவித்துள்ளார்.

## கொழும்பு ஆஸ்பத்திரியில் விபத்துகள் சிகிச்சைப் பிரிவு

### பிரதமர் திறந்துவைத்தார்

கொழும்பு, ஞாயிறு

கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் விபத்துக்களுக்கான புதிய வைத்திய பிரிவை இன்றுகாலை பிரதமர் டட்லி சேனநாயக்கா சம்பிரதாயபூர்வமாக திறந்துவைத்தார்.

அவர் திறந்துவைத்துப் பேசுகையில், காயமுற்றவர்களுக்கு சேவைசெய்வது இந்நாட்டுக்குச் செய்யும் சமூகசேவை போன்றதென்றும், இந்தப் புதிய பிரிவால் உடனுக்குடன் விபத்துக்குள்ளானவர்கள் சிகிச்சைபெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறதென்றும் கூறினார்.

சுகாதாரமந்திரி திரு. எம். டி. எச். ஜெயவர்த்தன பேசுகையில், விபத்துக்குள்ளானவர்களுக்கு உடனடியாக சிகிச்சை வழங்கப்படுவதில்லை என்ற குறை நெடுங்காலமாக இருந்து வந்ததென்றும், இந்தப் புதிய பிரிவால் அக்குறை இல்லாமல் போய்விடுமென்றும் கூறினார். பல லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டிருக்கும் இவ் விபத்துக்கான வைத்திய பிரிவு இலங்கையில் முதலாவதாக இங்கு தான் அமைக்கப்பட்டுள்ளதென்ற தகவலையும் அவர் வெளியிட்டார்.

இருதயசேவைக்கான புதிய சாதனங்கள் இங்கு இணைக்கப்படவிருப்பதாக சுகாதார மந்திரி கூறினார்.

# உண்ணாவிரத சாது மரணம்

## மதுரைக்கருகில் மற்றும் ஒருவர் கவலைக்கிடம்

மதுரை, ஜன 2

பசுவதையைத் தடைசெய்யக் கோரி உண்ணாவிரதமிருந்துவந்த பெஹ்ரி சந்த் ட்ஹாஜா என்னும் இந்து சந்நியாசி நேற்று மாலை காலமானார். கடந்த 42 தினங்களாக உண்ணாவிரதமிருந்துவந்த ப்ஹாஜா சுவாமிகளின் வயது 50.

மதுரைக்கருகில் பிருந்தாவனம் என்ற இடத்துக்கருகில் பிரபுதத்த பிரமச்சாரிசுவாமிகளுடன் உண்ணாவிரதமிருந்துவரும் மற்றும் ஏழு சந்நியாசிகளில் [illegible] ஒருவர் [illegible] தாக உள்ளதா [illegible]

நேற்று பசுவதையைத் தடைசெய்ய வேண்டுமென [illegible] பல இடங்களில் கடையடைப்பு நடந்தது.

## பதுக்கல்காரர்மீது கடும் நடவடிக்கை

### மாவுக்குத் தட்டுப்பாடு இல்லை என்கிறார் உணவு இலாகா அதிகாரி

யாழ்ப்பாணம், திங்.

யாழ்ப்பாணப் பகுதியில் அரிசிக்குத் தட்டுப்பாடும் விலை உயர்வும் ஏற்பட்டுள்ளபோதிலும் மாவுக்கோ, சீனி மற்றும் அத்தியாவசிய உப உணவுப்பொருட்களுக்கோ எதுவித தட்டுப்பாடும் ஏற்படமாட்டாதென யாழ்ப்பாணம் உதவி உணவுக்கட்டுப்பாட்டதிகாரியான திரு. பி. வீரசிங்கம் நேற்றுத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தின் பலபகுதிகளிலுமுள்ள கடைகளிலும் அரிசி 1 ரூபாவிலிருந்து 2 ரூபாவரை விற்கப்படுவதாக தமக்குப் பொதுமக்கள் அறிவித்துள்ளபோதிலும் அரசாங்கம் அரிசிக்குக் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்காததினால் தாம் இது விஷயமாக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாதென அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பொதுமக்களுக்குத் தேவையான அளவு போதிய மாவை உணவுக்கட்டுப்பாட்டிலாகா விநியோகம் செய்துள்ளது. இருந்தபோதிலும் வலிகாமம் வடக்கு, யாழ்ப்பாணம் பெரியகடை ஆகிய இடங்களிலுள்ள பல கடைகளிலும் இதனைப் பதுக்கி வைத்திருப்பவர்களைக் கண்டுபிடித்து அவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் அனைவரையும் உணவுக்கட்டுப்பாட்டிலாகாவுடன் சேர்ந்து ஒத்துழைக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். மா, மல்லி, மிளகாய் பதுக்கிவைத்திருப்பவர்களை ஒருவாரமாக கண்டுபிடிக்க யாழ்ப்பாணம் உணவுக்கட்டுப்பாட்டு இலாகாவினர் ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மிளகாயின் கட்டுப்பாட்டு விலை 1-90 சதம் மாத்திரமே எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுதாண்ட் கோரிக்கை: அமெரிக்கா நிராகரிப்பு

## பிரிட்டனின் முத்தரப்பு மகாநாட்டு யோசனைக்கு ஆதரவு

வாஷிங்டன், ஜன. 1

வட வியட்நாம் மீது குண்டு வீசுவதை எது நிபந்தனையுமின்றி நிறுத்த வேண்டுமென ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் விடுத்த வேண்டுகோளை அமெரிக்கா நிராகரித்து விட்டது.

நத்தார் புதுவருட பண்டிகைகளை யொட்டி வியட்நாமில் தற்காலிகமாக ஏற்படும் யுத்த நிறுத்தத்தை நிரந்தர யுத்தநிறுத்தத்துக்கு வழிவகுக்கக் கூடிய முறையில் முயற்சி செய்யுமாறு ஐ. நா. தலைமைக் காரியதரிசியை அமெரிக்கா சென்ற மாதம் கேட்டிருந்தது. ஐ. நா. விலுள்ள அமெரிக்க நிரந்தரப் பிரதிநிதி ஆர்தர் கோல்ட்பேர்க் இக்கோரிக்கை அடங்கிய கடிதமொன்றை யுதாண்டுக்கு அனுப்பியிருந்தார். வட வியட்நாமில் நத்தார் பண்டிகையையொட்டி ஏற்பட்ட யுத்தநிறுத்தத்தை நிரந்தர யுத்தநிறுத்தமாக நீடிக்கச் செய்வதற்கு யுதாண்ட் அமைதியான நடவடிக்கை மேற்கொண்டிருந்தார். நத்தார் பண்டிகையை யொட்டிய 48 மணிநேர யுத்த நிறுத்தக் கெடு முடிவடைந்ததும் உடனடியாக அங்கு சண்டை ஆரம்பமாகியது.

நிரந்தர யுத்தநிறுத்தத்துக்கு உதவிபுரியும்படி அமெரிக்கா விடுத்த கோரிக்கை பற்றிய கடிதத்துக்கு யுதாண்ட் எழுதிய பதிலில் வடவியட்நாம் மீது குண்டு வீசுதலை நிபந்தனை எதுவுமின்றி உடனடியாக நிறுத்தவேண்டுமென்று யுதாண்ட் கேட்டிருந்தார்.

வடவியட்நாம் மீது குண்டுவீசுவது நிறுத்தப்படவேண்டும். இருதரப்பினரும் தமது படைநடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ள வேண்டுமென்றும், யுதாண்ட் தமது பழைய யோசனையை மீண்டும் தெரிவித்திருந்தார்.

புதுவருடத்தையொட்டிய யுத்தநிறுத்தம் மத்தி நிமிஷங்களே அமுலிலிருந்தது.

எதிர் தரப்பிலிருந்து சரியான உறுதி கிடைக்காதவரை வடவியட்நாம் மீது குண்டுவீசுவதை நிறுத்த முடியாது என்று அமெரிக்கா தெரிவித்து யுதாண்டின் கோரிக்கையை நிராகரித்துவிட்டது.

## இந்தியா ஆட்சேபம்

புதுடில்லி, ஜன. 1

இந்திய—பாகிஸ்தான் சண்டையின்போது பாகிஸ்தான் கைப்பற்றிய இந்திய கப்பல்களை விற்பதற்கு பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளதை இந்தியா ஆட்சேபித்திருக்கிறது.

## பிரிட்டன் யோசனைக்கு அமெரிக்கா வரவேற்பு

வியட்நாம் பிரச்னைக்கு ஒரு தீர்வு காணுவதற்கு வடக்கு வியட்நாம், தெற்கு வியட்நாம், அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளும் கூடிப்பேசவேண்டும் என்று பிரிட்டன் ஒரு யோசனை தெரிவித்துள்ளது. இந்த யோசனையை அமெரிக்க அதிபர் திரு. ஜோன்சன் வரவேற்றுள்ளார். வடக்கு வியட்நாமை ஹனோயிலோ, பிரிட்டனிலோ வேறு எந்த இடத்திலுமோ சந்தித்துப் பேச அமெரிக்கா தயாராக இருக்கிறது என்று அவர் சொன்னார்.

எதிர் தரப்பிலிருந்து சரியான, உறுதியான சமிக்ஞை கிடைக்கும்வரை வியட்நாமும் வடவியட்நாம் மீது குண்டு வீசுவதை நிறுத்தமுடியாது என்றும் திரு ஜோன்சன் தெரிவித்தார்.

### ரஷ்யா சந்தேகம்

வடக்கு, தெற்கு வியட்நாம்களும் அமெரிக்காவும் கூடிப் பேசவேண்டுமென்ற யோசனை அமெரிக்காவுக்காகத் தெரிவிக்கப்பட்ட ஒரு பக்கச்சார்பான யோசனை என்று சோவியத் ரஷ்யா தெரிவித்துள்ளது.

வடக்கு வியட்நாமுக்கு ரஷ்யா அனுப்பியுள்ள புத்தாண்டுச்செய்தியில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் ஆக்கிரமிப்பை எதிர்த்து நடத்தும் போராட்டம் வெற்றிபெறுமெனவாழ்த்தியுள்ளது.

## அமெரிக்கா மீது பிரஞ்சு அதிபர் டிகோல் கண்டனம்

வியட்நாம் சம்பந்தமாக அமெரிக்கா கடைப்பிடிக்கும் கொள்கையை பிரஞ்சு அதிபர் ஜெனரல் டிகோல் வன்மையாகக் கண்டித்தார்.

'அநியாயமான, வெறுக்கத்தக்க நடவடிக்கை' என்று அமெரிக்காவின் தாக்குதலை டிகோல் கண்டித்தார். "வலிய நாடுகளுடன் சிறிய நாடு ஒன்றை நிர்மூலமாக்கும் செயல்தான் அமெரிக்கா வியட்நாம் சம்பந்தமாகக் கடைப்பிடிக்கும் கொள்கையின் அர்த்தம் என்று டிகோல் கூறினார். வியட்நாமிலிருந்து அமெரிக்கத் துருப்புக்கள் வெளியேற வேண்டுமென்று அவர் சொன்னார்.

## 'நான் மௌனமாக இருக்கமாட்டேன்'

### சுகர்ணோ அறிவிப்பு

ஜாகர்த்தா, ஜன. 1

தம்மை மௌனமாக இருக்கும்படி சிலர் கூறுகின்றனரென்றும் ஆனால் தாம் மௌனமாக இருக்கப் போவதில்லையென்றும், இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்ணோ தெரிவித்துள்ளார்.

தமது மனச்சாட்சி உறுத்துமேயானால் தாம் தமது கருத்தை வெளியிடத் தயங்கப்போவதில்லை யென்றும் அவர் சொன்னார்.

"இந்தோனேஷிய புரட்சியில் பிறந்து, வாழ்ந்து இரத்தத்துடன் ஊறிப்போன என்னை யாரும் 'சும்மா' இருக்கச்செய்ய முடியாது" என்று அவர் கூறினார்.

இதற்கிடையில் டாக்டர் சுகர்ணோவையும் நீதிமன்றத்தின் முன் நிறுத்தி சென்ற புரட்சியில் அவருக்குள்ள பங்குபற்றியும் விசாரணை செய்யவேண்டுமென்று 500 மாணவர்கள் நேற்று ஜெனரல் சுஹர்டோ [illegible] லயம் முன் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

உணவுப் பிரச்னையைத் தீர்க்க

## 'அரசாங்கத்துடன் தமிழர் ஒத்துழைக்கவேண்டும்'

### அமைச்சர் திருச்செல்வம்

குருமன்காடு, ஞாயிறு

"நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள தேசிய நெருக்கடியான உணவுப் பிரச்னையில் தேசிய அரசாங்கம் மிக்க அக்கறைகொண்டு இப்பிரச்னைக்குத் தீர்வுகாண்பதில் ஆன முயற்சிகள் செய்துவருகிறது. தமிழ் மக்கள் இதில் அரசாங்கத்துக்கு கூடிய ஒத்துழைப்பை அளிக்க முன்வரவேண்டும்."

இவ்வாறு உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் தெரிவித்தார்.

வட்டுக்கோட்டைத் தொகுதி மக்களால் திரு. அமிர்தலிங்கத்துக்கு வரவேற்பு அளிக்கும் பொருட்டு சேகரிக்கப்பட்ட 12 ஆயிரத்தை அவரிடம் கையளிப்பதற்காக நடைபெற்ற வைபவத்தில் பேசுகையிலேயே திரு. திருச்செல்வம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

முற்காலத்தில் தமது செழுமையைக் கருதிய அரசியல்வாதிகள் கடமையாற்றினர். ஆனால் தமிழரின் இழந்துபோன உரிமைகளை மீண்டும் பெற்றுக் கொள்ள தியாகத்தின் வழியில் போராட தமிழரசுக் கட்சி இட்டங்களை அமைத்து நடைமுறையில் செயல்படுத்தியது.

தமிழர் தமது நாகரிகம் பண்பு பாரம்பரிய மத, கலாச்சாரம் ஆகியவை அழிந்துபோகாதவண்ணம் பாதுகாக்கவேண்டிய நிலையில் இப்போது இருக்கிறார்கள். நேர்மை, தைரியம், தியாகம் இவற்றின் மூலம் நாம் இவற்றைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். இவ்வித உயர் குணங்களை திரு. அமிர்தலிங்கம் கொண்டுள்ளார் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

"இந்திய கல்விக் கமிஷன் திட்டத்தில் கொடுத்துள்ள கொள்கைப்படியே மும்மொழித்திட்டம் ஒன்றினை நான் அரசாங்கத்திடம் எடுத்துக்கூறினேன். தாய்மொழி முதலிலும் இரண்டாவதாக ஆங்கிலமும் விருப்பத்தின்பேரில் மூன்றாவது மொழியைத் தெரிவு செய்து படிக்கவும் கூடியதே மும்மொழித்திட்டமாகும். இதனை எதிர்க்கட்சியினர் எதிர்க்கவில்லை. ஆனால் எமது கல்வி அமைச்சர் என்ன செய்வாரோ தெரியாது. ஆனாலும் அரசாங்கத்தை மும்மொழித்திட்டத்தை ஏற்றுக்கொள்ள முயற்சி செய்வோம்.

தேசிய அரசாங்கம் மாவட்டசபைகளை நிறுவும் சனப்பிரசங்கத்தில் தெரிவித்து ஏற்றுக்கொண்டுள்ளது. சட்டநகல் மசோதா தயாரிக்கப்பட்டுள்ளது. உரிய நேரத்தில் பாராளுமன்றத்தில் மாவட்டசபை மசோதா சமர்ப்பிக்கப்படும். இன்று எதிர்நோக்கும் சிக்கல்களுக்கு மத்தியில் எமது கட்சி அரசாங்கத்துடன் தொடர்புகள் வைத்துள்ளது. ஒரு சமய கலாச்சார அடிப்படையில் அமைப்பதைப் பல்கலைக்கழகம் என்று சொல்ல முடியாது. சகல விஞ்ஞான, பொறியியல், வைத்திய, சட்ட, கலைப் பிரிவுகளைக் கொண்ட பூரணத்துவம் வாய்ந்த பல்கலைக்கழகம் அமைக்கப்படுவதையே எமது கட்சி லட்சியமாகக் கொண்டுள்ளது".

செனட்டர் சு. நடராசா உட்பட வேறு பலரும் இவ்விழாவில் பேசினர்.

திரு இ. சுப்பிரமணியம் நன்றிகூறினார்.

## 'வேற்றுமை அகற்றி கடமையாற்ற வேண்டும்'

சங்கானை, ஞாயிறு

"எங்கள் பட்டினசபையின் மின்சாரத் திறப்பு விழாவைத் திறம்படச் செயல்படுத்துவதற்கு உதவியவர் திரு. சி. சுப்பிரமணியம். அவரின் சேவையை, திறமையை நாம் பாராட்டாமல் விடமுடியாது. அவர் மற்றைய உத்தியோகத்தர்களுக்கும் ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினார்."

சங்கானைப் பட்டினசபைத் தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம், பட்டினசபை ஊழியர் திரு. சி. சுப்பிரமணியத்துக்கு பட்டினசபைக் காரியாலயத்தில் நடைபெற்ற பிரிவுபசார விழாவில் பேசும்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், ஸ்தல ஸ்தாபன மன்ற ஊழியர்கள் ஒவ்வொருவரும் வேற்றுமைகளை அகற்றி நேர்மையாகவும் கண்ணியமாகவும் தங்கள் கடமைகளைச்செய்வாரேயானால் நிர்வாகம் திறமையா[illegible]

## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஞாயிறு

நல்லூர், கோப்பாய், கொழும்புத்துறை, பலாலி அரசினர் ஆசிரியர் கலாசாலைகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை வடமாகாணக் கல்விக்கந்தோரில் நடைபெற்றது.

வடமாகாண கல்வி அதிகாரி திரு. திருநாவுக்கரசு தலைமையில் மூவரைக் கொண்ட குழுவே இப்பரீட்சையை நடாத்தியது. சுமார் முந்நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இந்த நேர்முகப் பரீட்சையில் தோற்றினர். (ந. நி.)

## பாரம்பரிய கலைகளை வளர்க்க தமிழ்மக்கள் காட்டும் ஆர்வம்

### யாழ். அரசாங்க அதிபர் பாராட்டு

யாழ்ப்பாணம், ஞாயிறு

"மனித வாழ்வின் மகிழ்ச்சியையும் மனதிற்கு அமைதியையும் அளிப்பன இயல், இசை, இலக்கியம், நாட்டியம், நாடகம் போன்ற கலைகளே. பாரம்பரிய கலைகளை எந்தக் கஷ்டமான சூழ்நிலைகளிலும் கூட வளர்ப்பதில் தமிழ் மக்கள் முன்னணியில் நிற்பவர்கள் என்பதை நான் நன்கு அறிவேன். இன்றைய சூழ்நிலையில் தமிழ் மக்களுக்கிடையிலுள்ள பல் வேறு பிரச்னைகளுக்கிடையிலும் கூட இவர்கள் பல்வேறு இடங்களிலும் அடிக்கடி இப்படி [illegible] கலைகளை வளர்க்கவும் கலைகள் மூலம் [illegible] அதனை வளர்ப்பதில் இவர்கள் காட்டும் மிகப்பெரிய ஆற்றலையும் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்."

மேற்கண்டவாறு குருநகர் கலைக் கழகத்தின் ஆதரவில் குருநகர், சென் ஜேம்ஸ் பெண்கள் பாடசாலையில் நடைபெற்ற கலை விழாவுக்குத் தலைமை வகித்த வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தனது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

விழாவின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு எஸ். சி. மாணிக்கவாசகர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

கலைகளை வளர்க்கவும் கலை ஆர்வத்தையும், ஆற்றலையும் ஊக்குவிக்கவும், இயக்கங்களும், சனசமூகநிலையங்களும் இன்றியமையாதன. கிராமங்கள் தோறும் உள்ள எல்லா கிராம முன்னேற்றச் சங்கங்களும் இப்படியான விழாக்களை நடாத்துவதன் மூலம் இளைஞர்கள் மத்தியில் கலை உணர்ச்சியைப் புகுத்துவதோடு, தாம்வாய்ந்த பல கலைஞர்களின் கலைத்திறனை மக்களும் உணரக் கூடியதாக இருக்கும்.

விழாவில் ஓவியம் சிற்பம் ஆகியவைகளடங்கிய கலைக் கண்காட்சியும், இயல், இசை, நடன, நாடக நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (ந. நி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியத் தேர்தல் அரங்கு

# சென்னை நகரையே கலக்கிய தி. மு. க. மாநில மகாநாடு

## அண்ணுதுரை ஆட்சிக்கு ஆசிகூறினர் ராஜாஜி

ஊர்வலங்களையும், ஆர்ப்பாட்டங்களையும், மகாநாட்டையும் வைத்துக் கொண்டு தமிழ் நாட்டுத் தேர்தல் பற்றித் தீர்ப்பளிக்க முடியுமென்ருல், தி. மு. க. வெற்றிபெற்றுவிட்டது என்று சொல்லலாம்.

சென்னையில் நான்கு நாட்களாக நடந்து, நேற்றுமுன் தினத்துடன் முடிவடைந்த தி. மு. க. மாநில மகாநாடு சென்னை நகரையே ஒரு கலக்குக்கலக்கிவிட்டது.

சென்னை ஐலண்டு மைதானத்திலிருந்து புறப்பட்ட 10,000 க்கு மேற்பட்ட சைக்கிள்கள், இருநூறு மோட்டார்கள், 218 லொறிகளுடன் மூன்று மைல் நீளம் வரை வியாபித்திருந்த மக்கள் ஊர்வலம் பார்த்த ஆரத்த கணத்திலே உணர்ச்சி ததும்பிடக்கூடிய விதத்தில் அமைந்திருந்தது.

ஊர்வலத்தைப் பற்றி வர்ணிப்பதென்ருல் பக்கம் பக்கமாகவே வர்ணித்துக்கொண்டிருக்கலாம். இந்த ஊர்வலத்தின் நடுவில் தேர்போல் அலங்கரிக்கப்பட்ட ஒரு வண்டியில் தலைவர் சி. என். அண்ணுதுரை வந்தார். இந்த வண்டியில் மு கருணுநிதி, இரா நெடுஞ்செழியன், என் வி நடராசன் ஆகியோர் இருந்தார்கள். வீதியின் இருமருங்கிலுமிருந்தவர்களுக்கு அண்ணுதுரை கையை உயர்த்தி ஆட்டிக்கொண்டுபோன போது, கூடியிருந்தவர்கள் செய்த உணர்ச்சி ஆர்ப்பாட்டம் விண்ணைப் பிளந்து கொண்டிருந்தது. ஊர்வலத்தினுல் பல இடங்களிலும் போக்குவரத்துக்கள் பல மணிநேரம் தடைப்பட்டிருந்தன. ஊர்வலம் சென்ற வழி நெடுகிலும் அமைக்கப்பட்டிருந்த அலங்கார வளைவுகள், பந்தல்கள், கண்ணுக்கு விருந்தாகவிருந்தன.

முதல்நாள் மகாநாடு தி. மு. கவின் வெற்றியை உறுதிப்படுத்துவதாக இருந்ததென்று சொன்னுல், இரண்டாம் நாள் மகாநாடு இக்கட்சி அரசாங்கம் அமைப்பதற்கு எதிர்க்கட்சிகளின் முழு ஆதரவையும் உறுதிப்படுத்தும் ஒரு சர்வகட்சி மகாநாடாக விளங்கியது என்றே சொல்லலாம்.

சுதந்திராக் கட்சித்தலைவர் ராஜாஜி தி மு க வெற்றி பெற்றுத் தமிழ் நாட்டில் அரசாங்கமமைக்க ஆசி கூறியபோது, 50 000 பேர் கூடியிருந்த மகாநாடு அவையில் நிசப்தம் நிலவியது.

முஸ்லிம் லீக் தலைவர் ஸ்ரீ மகமது இஸ்மாயிலும், பார்வார்டு பிளாக் தலைவர் ஸ்ரீ முக்கையா தேவரும் தேர்தலில் எதிர்க்கட்சிகளை ஆதரித்து தி மு க மந்திரிசபை அமைக்க உதவுமாறு மக்களைக் கேட்டுக்கொண்டார்.

கலைஞர் மு கருணுநிதியின் தொடக்கவுரையுடன் ஆரம்பமான இரண்டாம்நாள் மகாநாட்டின் மேடையில் தமிழரசுக் கட்சித் தலைவர் மா பொ சிவஞானக்கிராமணியர், இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும், 'நாம் தமிழர்' கட்சித்தலைவர் எஸ் பி ஆதித்தனும் அமர்ந்திருந்தனர்.

சுதந்திரா கட்சித் தலைவர் ராஜாஜியின் ஆசி உரை எல்லோரையும் கவரக்கூடியதாகவிருந்தது.

"தேர்தல் என்பது ஒரு மாயம். எதிர்க்கட்சிக்கூட்டு மாயத்தினுல் தேர்தலில் நாம் ஜெயிக்கவேண்டும். தி மு க—முஸ்லிம் லீ—சுதந்திரா ஓர் அற்புதமான கூட்டு. இது ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகச் சரித்திரத்தில் இடம்பெறும்" என்று ராஜாஜி இரத்தினச் சுருக்கமாகப் பத்தே பத்து நிமிடங்கள் மட்டும் பேசிவிட்டு அமர்ந்துவிட்டார்.

கலைஞர் மு கருணுநிதி காங்கிரஸை வன்மையாகத் தாக்கிப் பேசினர் தன் கட்சியின் நோக்கம் வரும் தேர்தலில் ஜெயிப்பது மட்டுமல்ல. பண்டைச் சிறப்புக்கு ஏற்ப கலாச்சார மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதும், பொருளாதார விடுதலை ஏற்படுவதுமாகும் என்று தலைவர் சி என். அண்ணுதுரை கூறினர். அண்ணுதுரை பேசி முடிந்த ஒவ்வொரு வார்த்தைக்கும் கரகோஷம் விண்ணைப் பிளந்தது.

மகாநாட்டின் போது பந்தலில் ஆண்கள்பகுதி நிரம்பி வழிந்தது.

பெண்களில் அநேகர்கைக் குழந்தையுடன் வந்திருந்தனர். ஆண்களில் பலர் கறுப்பும் சிவப்பும் கலந்த சால்வையோ அல்லது துண்டையோ அணிந்திருந்தனர். பெண்களில் பலர் கறுப்பு ஜாக்கெட்டும் சிவப்புச் சேலையும் அணிந்திருந்தனர்.

மகாநாட்டு மேடையும் கவர்ச்சியாகக் காணப்பட்டது. 1965 வருஷ ஹிந்தி எதிர்ப்புக்கிளர்ச்சியின் போது தீக்குளித்த 8 தி. மு. க. தொண்டர் உருவப்பட ஒவியங்கள் மேடையின் இருபுறத்தையும் அலங்கரித்தன. அரங்கநாதனைத் தீக்கொழுந்துகள் சூழ்ந்திருப்பதையும், தமிழ் தாய் வேதனையுடன் பார்த்துக் கொண்டிருப்பதையும் சித்தரித்துக் காட்டுவதாகஇருந்த ஒவியம் உணர்ச்சிக்கு வேலை கொடுப்பதாக இருந்தது. அரங்கநாதன் தீக்குளித்த இடம் மகாநாடு நடக்கும் இடத்திலிருந்து சில தூரத்தொலைவில் இருந்தது. அங்குபல தொண்டர்கள் சென்று அஞ்சலி செலுத்திய வண்ணமிருந்தனர்.

இந்த தி. மு. க. மாநில மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக வெளியூர்களில் வந்து போனவர்கள் தொகையே 5 லட்சம் என்று கூறப்படுகிறது.

மொத்தத்தில் இந்த மாநில மகாநாடு காங்கிரஸுக்கு ஒரு வித உணர்ச்சியை ஏற்படுத்தக் கூடியதாக அமைந்தது விட்டதென்று கூறலாம்.

## பிரிவுபசார விழா

உரும்பராய், ஞாயிறு

"இந்த வைத்தியசாலை அமைவதற்கு யாழ்ப்பாணச் சுகாதாரசேவை அத்தியட்சர் காரியாலயக் காரியதரிசி திரு. நா. சிவஞானப்பிரகாசம் அவர்கள் மூலகாரணராக இருந்தார்கள். ஒருவருடத்தில் இத்தவைத்தியசாலை பெரியபெரிய வைத்தியசாலைகளிலும் பார்க்க முன்னேறி இருப்பதற்கு இவ் வைத்தியசாலையின் முதலாவது அப்போதிக்கரியான செல்வி மதிவதனி—கந்தையாவே காரணமானார்."

யாழ்ப்பாணம் மாவட்ட சுகாதாரசேவை அதியட்சர் காரியாலயக் காரியதரிசி திரு. நா. சிவஞானப் பிரகாசம் அவர்களதும், உரும்பராய் மத்தியவைத்தியசாலையின் முதலாவது அப்போதிக்கரியான செல்வி பதிமாதனி கந்தையா அவர்களும் மாற்றலாகிச் செல்வதை முன்னிட்டு உரும்பராய் வைத்தியசாலைச் சபையின் ஆதரவில் சென்ற வெள்ளிக்கிழமை உரும்பராயில் நடைபெற்ற பாராட்டுவசார விழாவில் கலந்து கொண்ட கோப்பாய் எம். பி. திரு சி. கதிரவேலுப்பிள்ளை பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. ஆ. முத்துவேல் பிரிவுபசார விழாவுக்குத் தலைமை தாங்கினர்.

## இளம் மனைவியைக் காணவில்லை

### பொலிஸில் புகார்

மாவிட்டபுரம், ஞாயிறு

தமது இளம் மனைவி விஜயலட்சுமியை (21 வயது) காணவில்லையென மாவிட்டபுரத்தைச் சேர்ந்த வைரமுத்து மயில்வாகனம் (38 வயது) என்பவர் காங்கேசன்துறைப் பொலிஸில் புகார் செய்துள்ளார்.

தனது மனைவி விஜயலட்சுமி இரவு கக்கூசுக்குச் செல்வதாகக் கூறிவிட்டுப்போனுரென்றும், நெடுநேரம் வராது கண்டு, போய்ப் பார்த்தபோது அங்கு தம்பிராசா என்ற நபருடன் தகாத முறையில் நடந்து கொண்டிருந்தாரென்றும் தன்னைக் கண்டதும் அவர்கள் ஓடிவிட்டனரென்றும் அப்புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் விஜயலட்சுமியைத் தேடுகின்றனர்.

## உணவில்..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நாமும் எமது அன்றாட உணவுத்திட்டத்தில் மாற்றம் செய்தும், உப உணவு உற்பத்தியில் இயலுமான வரை ஈடுபட்டும் அரிசிப் பற்றுக்குறையைத் தீர்க்கவும் உணவு உற்பத்தியில் தன்னிறைவு காணவும்முயல வேண்டும். இந்த இருமுனைத்தாக்கல் நடைமுறையில் நடந்தால், அரிசி ... மெதுவாக ... விடும்.

## நீதிமன்றத்திலேயே தாக்கமுயன்ருராம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நண்பகல் இடைவேளையின் போது பிஸ்கால் பாதுகாப்பிலிருந்த குமாரசாமி இரத்தினசிங்கம் என்ற இளைஞரை தாக்க முயன்றதாக மாஜிஸ்திரேட் நீதிமன்ற சார்ஜண்ட் திரு. பி. நவரத்தினத்தால் கைது செய்யப்பட்ட நபரை இம்மாதம் 11-ம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு மாஜிஸ்திரேட் திரு. கே. ஜே. ராஜரத்தினம் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பெருமாள் கோவலடியைச் சேர்ந்தவரும் சின்னமாதா என அழைக்கப்படுபவருமான பெரியதம்பி வீரசிங்கம் என்பவரே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபராகும் இவரை வைத்திய பரிசோதனை செய்த யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரி ... (ந. கி)

## பதுக்கல்காரர்மீது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வது. போதிய மிளகாய் எல்லாக் கடைகளிலும் பல நோக்கக் கூட்டுறவுச்சங்கங்களிலுமிருப்பதாகவும் பொதுமக்கள் எவரையும் மிளகாய்க்குக் கூடுதல் விலை கொடுத்து வாங்கவேண்டாமெனவும் எச்சரித்துள்ள அவர் அப்படி விற்கும் வியாபாரிகள் பற்றிய தகவலைத் தமக்குத் தெரிவிக்க விரும்புவோரை யாழ்ப்பாணம் 429 தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்புகொள்ளும்படியும் அறிவித்துள்ளார்.

உபஉணவுப்பொருள்களில் மல்லிக்கு மாத்திரம் தான் அகில இலங்கையிலும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இத்தட்டுப்பாட்டை ஓரளவுக்குச் சமாளிப்பதற்காகஇம் மாதம் முதல் ஒவ்வொரு கூப்பனுக்கும் 1 மாதகாலத்துக்கு அரை அவுன்ஸ் மல்லி வீதம் கூட்டுறவுச் சங்கங்கள் ஐக்கிய பண்டகசாலை மூலம்வழங்கப்படவிருக்கின்றது.

எதிர்வரும் பொங்கல் திருநாளை முன்னிட்டு பொதுமக்களுக்குப் போதுமான சர்க்கரையை யாழ்ப்பாண மாவட்டத்தில் விநியோகம்செய்ய சர்க்கரை யாழ்ப்பாணத்துக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாம். இவ்வாரம் முதல் பொதுமக்களுக்குச் சர்க்கரையும் விநியோகம் செய்ய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அவர் தெரிவித்தார். (ந. நி.)

## தேசிய சேமிப்பு நிர்வாகக் கூட்டம்

மானிப்பாய், ஞாயிறு

"யாழ்ப்பாண மாவட்டத்தில் 1966-ம் ஆண்டு ஆனி மாதம்வரை, ஒன்பது மாதங்களில் ரூ 3,559,127-71 சதம் சேமிக்கப்பட்டுள்ளது" என அடமகாணயாழ். மாவட்ட தேசிய சேமிப்பு அமைப்பாளர் சமூகஜோதி கே. முதலியார் கி. தியாகராசா, யாழ்ப்பாணச் செயலகத்தால் நடைபெற்ற யாழ். மாவட்ட தேசிய சேமிப்பு நிர்வாகக் கூட்டத்தில் பேசும் போது கூறினர். அரசாங்க அதிபர் திரு. வேர்வன் அபயசேகரா தலைமை வகித்தார்.

காரியாதிகாரி திரு. வி. முருகேசம்பிள்ளை பேசுகையில், பாடசாலைப் பிள்ளைகள் ஒவ்வொரு நாளும் குறைந்தது 10 சதமாவது சேமிக்க வேண்டுமென்றும் சேமிப்புப் பத்திரங்களை பாடசாலை அதிபர்கள் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்றும் கூறினர்.

## இடமாற்றம்

இமையாணன், ஞாயிறு

தொண்டைமானுறு பகுதியின் சுகாதாரப் பரிசோதகராகக் கடமையாற்றிய திரு. க. கனகசிங்கம்; வடமராட்சி பகுதிக்கு இடமாற்றலாகிச் செல்கின்ருர் இவருடைய இடத்திற்கு மலைநாட்டுப் பகுதியில் சுகாதாரப்பரிசோதகராகக் கடமையாற்றிய திரு. பி. வி. மகேந்திரன் மாற்றலாகி வருகின்றார்.


## ஒரு நற்செய்தி

தமிழிலும் ஆங்கிலத்திலும் சகலவித அச்சு வேலைகளும் செய்வதற்கு 'ஈழநாடு' அச்சகம் பூரணமான நவீன சாதனங்களைக் கொண்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சகல வேலைகளும் திருப்திகரமாகவும், சிறப்பாகவும் குறித்த நேரத்தில் செய்துகொடுக்கப்படும்.

விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.

தொழில் மனேஜர்.

ஈழநாடு லிமிட்டெட்,
63, சிவன்கோவில் மேற்கு வீதி,
யாழ்ப்பாணம்.



## ஈழநாடு சந்தா விபரம்

ஈழநாடு தினசரி பிரதி சதம் 10
ஈழநாடு வாரப்பதிப்பு பிரதி சதம் 20

### இலங்கை—இந்தியா

| | | வாரமலர் மாத்திரம் |
|---|---|---|
| ஒரு வருடம் | ரூபா 50-00 | ரூபா 14-00 |
| ஆறு மாதம் | ரூபா 26-00 | ரூபா 7-50 |
| மூன்று மாதம் | ரூபா 14-00 | ரூபா 4-00 |

### மலேசியா

| | | வாரமலர் மாத்திரம் |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு | ரூபா 70-00 | ரூபா 16-00 |
| ஆறு மாதத்திற்கு | ரூபா 38-50 | ரூபா 8-50 |
| மூன்று மாதத்திற்கு | ரூபா 20-50 | ரூபா 5-00 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஆண்டவனிடம் அழுதால் விமோசனம் கிடைக்கும்'

சங்கானை, புதன்

"வாழ்க்கையிலே ஏற்படும் அல்லல்களைப் போக்க ஒரே வழி சமய வாழ்க்கையிலீடுபட்டு ஆண்டவனைப்பாடுவதே. நாம் வாழ்க்கையிலே செய்யும் தவறுகளை மூடி மறைப்பதிற் பயனில்லை. குறைகள் நமதுள்ளத்திலே அழுகி உள நோய்களை வளர்க்கின்றன. மனநோயாளரின் உள்ளத்திலே அடங்கியிருக்கும் குறைகளை அவர்கள் வாயாலேயே பேசச் செய்து நோய்களைத் தீர்க்க முற்படுகிறார்கள், இக்கால மனநோய் மருத்துவர்கள். எனவே எமது குறைகளை ஆண்டவனிடம் முறையிட்டு அழுதால் நிச்சயம் எமக்கு விமோசனம் கிடைக்கும். நாயன்மார்கள் வாழ்க்கையிலிருந்து நாமறிந்து கொள்ளவேண்டிய முதற்பாடமே இது"

பூநகரி மகாவித்தியாலய அதிபர் திரு. மு. சிவானந்தம், சித்தன்கேணி சிவன் கோவிலில் நடைபெற்ற மணிவாசகர் விழாவில் சிறப்புரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தலைமை வகித்துப்பேசிய ஆசிரியர் ந. சிவஞானம் கோவிலிற் பல சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமென்றும், அர்ச்சகர்கள் சிரம வாழ்வு வசதிசெய்துகொடுக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார். திருமதி பூமணி வேலுப்பிள்ளை செல்வி இ. இரங்கநாதன் உட்படப் பலர் பேசினார்கள்.

## பனையிலிருந்து விழுந்தார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பனைமரமொன்றில் கள்ளு சீவுவதற்காக ஏறிய திருச்செல்வம் என்பவர் மரத்திலிருந்து தவறிவிழுந்ததால் படுகாயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நெடுந்தீவைச் சேர்ந்த இவரது நிலைமை கவலைக்கிடமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ந. நி.)

## நில அளவைப்பகுதி அதிபராக நியமனம்

யாழ்ப்பாணம், திங்கள்

அளவெட்டியைச் சேர்ந்த திரு ஏ. தம்பிராசா வடபகுதி நில அளவைப்பகுதி அதிபராக இன்று தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

நில அளவைப் பகுதி இங்கே ஆரம்பிக்கப்பட்ட முப்பது ஆண்டுகளுக்குப்பின் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் இப்பகுதிக்கு இங்கு நியமிக்கப்பட்டுள்ளது இதுவே முதல் தடவையாகும்.

## றெயில்வே கார்ட் பரிதாப மரணம்

நாவலப்பிட்டி, ஞாயிறு

நாவலப்பிட்டி புகையிரத நிலையத்தைச் சேர்ந்த தலைமைக்கார்ட் திரு. பரமராஜ் நாவலப்பிட்டி புகையிரத நிலையத்திலிருந்து நானுஓயா நோக்கிச்சென்ற புகைவண்டியில் கடமையாற்றச்செல்கையில் அக்குரன்ஓய என்ற இடத்தில் பள்ளமொன்றிற்குள் தவறிவிழவே ஆபத்தான நிலையில் அதே புகைவண்டியில் அவரை நாவலப்பிட்டிக்கு பின்னோக்கி கொண்டுவந்தனர். ஆஸ்பத்திரியில் அனுமதிக்குமுன் அவர் மரணமானார்.

எட்டு குழந்தைகளின் தந்தையான இவருக்கு 40 வயதாகும்.

## கருத்தரங்கு

அராலி, ஞாயிறு

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையினர் கருத்தரங்கொன்றை திரு. இ. கந்தமுத்துவின் தலைமையில் அராலி முருகமூர்த்தி வித்தியாசாலையில் நடத்தினர்.

மேற்பார்வைச் சபையின் பிரதிநிதி திரு. மு. கணபதிப்பிள்ளையும், கூட்டுறவுப் பரிசோதகர்கள் திருவாளர் க. சிவகுருநாதன், செ. இலிங்கநாதனுமியோர் சமுகமாயிருந்தனர். அராலி தெற்கு—கிழக்கு மேற்கு—வடக்கு ப. நோ. கூ. சங்கம், அராலி, அராலி விக்னேஸ்வர ப. நோ. கூ. சங்கப் பிரதிநிதிகள் பங்குபற்றினர். 'சேமப்பணம்' சேர்ப்பதில் கூட்டுறவாளரிடைத் தூண்டுதல் அவசியமெனப் பலர் கருத்துக்களை தெரிவித்தனர்.

# பிரிவுபசார வைபவம் கூட்டுப்பிரார்த்தனையானது

### காரியாதிகாரியின் இடமாற்றம் ரத்தானதன் பயன்

மாவிட்டபுரம், ஞாயிறு

வலி-வடக்குக் காரியாதிகாரியின் மாற்றம் திடீரென நிறுத்தப்பட்டுள்ளது. உள்நாட்டுமந்திரியின் அவசர உத்தரவுப்படி வலி-வடக்கு காரியாதிகாரியாகக் கடமையாற்றிய திரு. டி. குருகேசம்பிள்ளை தலைமைக்காரியாலய காரியாதிகாரியாக கடமையாற்ற மாற்றம் பெற்றிருந்தார்.

பாராளுமன்றப் பிரதிநிதிகளின் வேண்டுகோளுக்கு இசைந்து வலி-வடக்கு காரியாதிகாரியாக திரு. கே. டி. குருகேசம்பிள்ளை தொடர்ந்து கடமையாற்ற அமைச்சர் இப்போது உத்தரவிட்டுள்ளார்.

தந்திமூலம் தெரிவிக்கப்பட்ட இச்செய்தியால் வெள்ளிக்கிழமை புன்னாலைக்கட்டுவன் விநாயகர் ஆலயத்தில் நடைபெறவிருந்த பிரிவுபசார விழா கூட்டுப்பிரார்த்தனையாக நடைபெற்றது. அவருக்கு இத்தவாரம் முழுவதும் நடத்தப்படவிருந்த பிரிவுபசாரக் கூட்டங்கள் கைவிடப்பட்டன.

## தாக்கப்பட்டாராம்

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் கிராமசபை லிகிதர் எஸ். பரமானந்தம் என்பவர் சங்கானை சந்தை பஸ் நிலையத்தில் இனம் தெரியாத நபரொருவரால் தாக்கப்பட்டதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் நடந்த தினத்தன்று இரவு பஸ்ஸைப் பிடிப்பதற்காக சங்கானைச் சந்தை பஸ்நிலையத்தில் அவர் காத்திருந்ததாகவும் அப்பொழுது இனம் தெரியாத ஒரு நபர் சைக்கிளில் வந்து அவ்விடத்தில் திடீரென்று இறங்கி திரு. பரமானந்தத்தைத் தாக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சங்கானைப் பொலிசார் இதுசம்பந்தமாக புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

## நோயாளருக்கு...

மாவிட்டபுரம், ஞாயிறு

ஆஸ்பத்திரியில் தானம் வழங்க அனுமதிக்கும்படி சுகாதாரப் பகுதியினர், எல்லா வைத்தியசாலைகளுக்கும் உத்தரவிட்டுள்ளனர்.

மரணத்தறுவாயில் உள்ள நோயாளருக்கு சமயாசாரப்படி தானம் வழங்க இதுவரைகாலமும் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் புதிய உத்தரவின்படி நோயாளருக்கான தானம் ஆஸ்பத்திரியில் கொடுப்பதற்கு அனுமதிக்கப்படும்.

சங்கானையில்

## பல்வைத்திய பிரிவு ஆரம்பமாகவில்லை

சங்கானை, ஞாயிறு

சங்கானை ஆஸ்பத்திரியில் பல் வைத்தியப்பிரிவு இன்று எதிர்பார்த்தபோல் ஆரம்பமாகவில்லை. பல் வைத்தியப் பிரிவுக்காக வரவழைக்கப்பட்டிருந்த பிரதான கதிரையின் ஒருபாகம் பழுதடைந்திருப்பதே இன்று ஆரம்பமாகாததற்கு காரணம் என்று கூறப்படுகிறது. உடனடியாக கதிரையைச் சீர்படுத்தி இப்பிரிவை ஆரம்பிக்கும்படி சங்கானை பட்டினசபைத் தலைவர் திரு. எஸ். கே. சிற்றம்பலம், சுகாதார அதிகாரியைக் கேட்டுள்ளார்.

இ. போ. ச.

## இன்ஸ்பெக்டர் தாக்கப்பட்டாராம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் மேற்கு இ. போ. ச. டிப்போவைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர்களில் ஒருவரான வேலுப்பிள்ளை நல்லதம்பி என்பவர் மண்டையில் காயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காரைநகர் துறையிலுள்ள சுப்பர் ஆறுமுகம் என்பவரது கடையில் நின்றபோது ஆறுமுகம் சிவகுமாரன் என்பவர் தன்னை நிலத்தில் தள்ளி வீழ்த்திவிட்டு தனது மண்டையில் உலக்கையால் பலமுறைகள் தாக்கியதாகவும் இதனால் தனக்குப் பலமான காயங்கள் ஏற்பட்டதாகவும் அவர் பொலிஸுக்குப் புகார் செய்துள்ளார். (ந நி)

நல்லூரில்

## கம்யூனிஸ்ட் கட்சிக் கிளை

யாழ்ப்பாணம், ஞாயிறு

கம்யூனிஸ்ட் வாலிபர்சங்கக் கிளையொன்று நல்லூர் அரசடிவீதியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

சமுதாயத்தை எதிர்நோக்கியுள்ள பல்வேறு பிரச்சினைகளையும் எதிர்த்துப் போராட வாலிபர்கள் தயாராயிருக்க வேண்டுமென்று கூட்டத்தில் விசேஷமாகக் கலந்துகொண்ட கம்யூனிஸ்ட் வாலிபசங்கத் தலைமைக் குழு உறுப்பினரான திரு. எஸ். விஜயானந்தன் கேட்டுக் கொண்டார். (ந.நி)

அரிசித் தட்டுப்பாடுபற்றி ஆராய

# அரசாங்க அதிபர் இன்று கூட்டும் மகாநாடு

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் இன்று காலை 9-30 மணிக்கு வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா கூட்டும் அவசர மகாநாட்டுக்கு யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த காரியாதிகாரிகள், தலைமைக் காரியாலயங்களின் உத்தியோகஸ்தர்கள், விவசாயப்பகுதி தலைமை உத்தியோகஸ்தர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

இம்மகாநாட்டில் அரிசித் தட்டுப்பாடு, உபஉணவுப் பொருட்களின் திடீர் விலையேற்றம், அரசாங்கத்தின் அரிசித்திட்டம் என்பன பற்றி ஆராயப்படும். (ந. நி)

# 'தீண்டாமை நோய்க்கு பௌத்தம் சாட்டையடி கொடுக்கும்'

### பூநகரி பௌத்த பாடசாலை திறப்பு விழாவில் வண. நந்தாராமநாயக்கதேரோ

பூநகரி ஞாயிறு

பூநகரி செட்டிய குறிச்சியில் புதிய பௌத்த பாடசாலையொன்றை யாழ்ப்பாணம் ஸ்ரீநாகவிகாரையைச் சேர்ந்த வண. கடவத்தவல நந்தாராம நாயக்க தேரோ திறந்துவைத்தார்.

அவர் திறந்துவைத்துப் பேசுகையில் கூறியதாவது: வடமாகாணத்தில் பௌத்த பாடசாலைகள் நான்கு ஸ்தாபிக்கப்பட்டு, அவை இயங்கிக்கொண்டிருக்கின்றன. பூநகரியில் இப்போது திறந்துவைத்துள்ள பாடசாலை ஐந்தாவதாகும். புத்த சமயம் பஞ்சசீலக் கொள்கையைப் பின்பற்றியது. இப்போது தமிழர்களில், தீண்டாமை என்னும் கொடியநோய் பரவி வருகின்றது. அப்படியான நோய்களுக்கு எமது புத்த சமயம் சாட்டையடி கொடுக்கும் என்றும் அப்படியான வழியில் செல்லாது சாதிபேதம் பாராது எவர் நல்லவரோ அவர்களுக்கு எமது சமயம் இடங்கொடுக்கும்."

திரு வண உணவட்டுனே குணரத்னதேரோ பேசும்போது "ஒருமனிதனுடைய மனநிலை சாந்தியடைவதற்கு சோலில் இருத்தல்வேண்டும். எமது புத்தசமயம் மறுபிறப்பில் நம்பிக்கை வைத்தபடியால், இப்போது வாழும் வாழ்க்கையை, நீதி, நேர்மை நியாயமாக வாழப் பழகிக்கொள்ளவேண்டும். உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்று இல்லை. அதை மனிதரே ஆக்கிக்கொள்ளுகின்றனர். அப்படியான வித்தியாசம்பாராது எமது புத்தசமயம் நடக்கின்றது. மனிதன் சமமாக வாழப் பழகிக் கொள்ளவேண்டும்" என்று கூறினார்.

திரு. ம. வயிரமுத்து தலைமைவகித்தார். திறப்புவிழாவில் கே. தவசிப்பிள்ளை, கே. நாகமுத்து, கே. இரத்தினசாமி, எம். இருளைநாயகம், வி. சின்னத்தம்பி, வே. சதாசிவம், ப. கந்தையா ஆகியோரும் பேசினர்.

ஜெனரல் இன்டஸ்ட்ரீஸ் லிமிட்டெட்

பழைய டயர்களை புதுப்பிக்கும் வேலைகளுக்கும்
சகல விதமான ரப்பர் சாமான்களுக்கும்
தொழில் நிலையங்களுக்குத் தேவையான
தற்காலிக கட்டட தளபாடங்கள்
றப்பர் பொம்மைகள்
ஆகியவற்றுக்கும்
எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்
20, ஸ்ரான்லி ரோட், :-: யாழ்ப்பாணம்.
45, அம்பலவாணர் ரோட்,
யாழ்ப்பாணம்.
போன்: 7024

இந்தப் பையன்களுக்கு நல்ல வருங்காலமுண்டு




ஒருநாள் அவர்கள் பெரியவர்களாவார்கள். நீங்கள் அவர்களுக்குத் திட்டமிட்டுள்ள பெருஞ் செயல்களைச் செய்து முடிக்க அவர்களுக்குச் சுகமும் பலமும் அவசியம். செவன் சீஸ் கொட்லிவர் எண்ணெய் இதற்கு ஏற்றது. டாக்டர்களைக் கேட்டால் சிறுவர்களின் உடம்பை வளர்ப்பதில் இது பிரசித்தி பெற்றதென்று சொல்வார்கள். உச்ச சக்தியூட்டும் எண்ணெய் வகைகளில் விட்டமின் ஏ., டி., ஆதியன கொண்டது இது. இருமல், தடிமன் ஆகியவற்றை அண்டவிடாது தடுக்கிறது. உங்கள் குழந்தைகளின் சுகத்தை தினமும் செவன் சீஸ் கொண்டு போஷியுங்கள். இன்றே ஆரம்பியுங்கள்.



செழுமையாக்க பொன் நிற கொட்லிவர் எண்ணெயும் குளிகைகளும்.

செவன்சீஸ்

[illegible] சாந்தப் போத்தலிலேயே [illegible] வழங்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்த்தப்பட்ட வரிகளை ரத்துச்செய்க

## உள்ளூராட்சி மந்திரி உத்தரவு

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண மாநகர சபையின் புதிய வரவு செலவுத்திட்டத்தில் சோலைவரியில் 2 1/2 வீதமும் குழாய்த் தண்ணீர் விநியோக வரியில் 4 1/2 வீதமும் உயர்த்தப்பட்டதை உடனடியாக ரத்துச்செய்யுமாறு உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணைக்குழுவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாணம் மாநகரசபை விசேஷ ஆணையாளர்கள் தயாரித்த புதிய வரவுசெலவுத்திட்டத்தின்படி கடந்த வருடங்களிலும் பார்க்க சோலைவரிக்கு 2 1/2 வீதம்கூட்டி 15 வீதமாகவும் குழாய்த்தண்ணீர் விநியோகத்துக்கு 4 1/2 வீதம் கூட்டி 19 வீதமாகவும் தயாரித்திருந்தார்கள்.

இவ் வரவுசெலவுத் திட்டத்தை மர்சிலனை செய்த அமைச்சர் திருச்செல்வம் இவ்விரு வரி உயர்வையும் உடனடியாக ரத்துசெய்யுமாறு ஆணையாளருக்கு நேற்றுக்காலை உத்தரவிட்டுள்ளார். (ந. நி.)

# அரிசிப்புத்தகங்களை ஒப்படைத்தனர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நேற்று யாழ்ப்பாண நகர் காரியாதிகாரி திரு. பூலோகநாயகத்திடம் யாழ்ப்பாணம் டெலிக் ரோட்டைச் சேர்ந்த திரு. ஜோசப் என்பவர் தமது குடும்பத்தின் 9 கூப்பன் புத்தகங்களையும் ஒப்படைத்தார்.

யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் திரு. எம். சபாரத்தினம், முன்னாள் ரயில்வே ஜெனரல் மனேஜர் திரு. எம். கனகசபை, நகைக்கடைச் சொந்தக்காரரான திரு. எஸ். மகாதேவா ஆகியோரும் தமது கூப்பன்களை ஒப்படைத்தனர்.

# "திறமையான ஒரு நிர்வாகி"

## திரு: சிவப்பிரகாசத்துக்கு அரசாங்க அதிபர் பாராட்டு

யாழ்ப்பாணம், ஞாயிறு

"நாம் ஒவ்வொருவரும் எந்தக்கட்சியையும் சார்ந்தவர்களாக இருக்கலாம்; எந்தக் கொள்கையையும் கடைப்பிடிப்பவர்களாகவும் இருக்கலாம். ஆனால் நாம் கடமையாற்றும் நேரங்களில் அரசாங்கத்தின் சட்ட திட்டங்களை அனுசரித்து அத் திட்டங்களைச் செவ்வனே நிறைவேற்றவேண்டும்.

தவறு போமேயானால் எமது கடமையிலிருந்து நாம் தவறியவர்களாவதோடு எமது நாட்டுக்கே துரோகம் செய்பவர்களுமாவோம்."

மேற்கண்டவாறு யாழ்ப்பாணம் உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியாகக் கடமையாற்றி ஜனவரி மாதம் 1-ம் திகதி முதல் திருக்கோணமலைக்கு மாற்றலாகிச் செல்லும் திரு. எஸ். சிவப்பிரகாசம் யாழ்ப்பாணம் அரசாங்கம் பொதுசேவைத்தொழிலாளர் சங்கத்தினர் தமக்கு அளித்த தேநீர் விருந்துபசாரத்துக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகக் கட்டிடத்தில் வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேர்னன் அபயசேகரா தலைமையில் நடைபெற்ற இந்தப் பிரியாவிடை வைபவத்தில் உதவி அரசாங்க அதிபர் திரு. எம். சபாரத்தினம், காரியாதிகாரி டபிள்யூ. செல்வரத்தினம் உட்பட அநேக உத்தியோகஸ்தர்கள் கலந்துகொண்டார்கள்.

திரு. வேர்னன் அபயசேகரா தமது உரையில் குறிப்பிட்டதாவது: திரு. சிவப்பிரகாசம் இடமாற்றலாகிச் செல்வதை முன்னிட்டு யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்க குமாஸ்தாக்கள் மாத்திரமன்றி பல தனிப்பட்ட ஸ்தாபனங்களும் கூட பிரிவுபசாரம் நடாத்துவதிலிருந்து அவரது திறமையையும், நற்குணங்களையும் பொதுமக்கள் அறியக் கூடியதாகவிருக்கின்றது. கடந்த காலங்களில் திரு. சிவப்பிரகாசத்தின் கெட்டித்தனமான நிர்வாகமும், அடக்கமான பணியும், பொதுநலத் தன்மையும், அவரது கருணை நிறைந்த மலப்பான்மையும் என் மனதில் நன்கு பதிந்துவிட்டன."

அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், தபாற்தந்தி ஊழியர் சங்கம் உட்பட அனேக சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் திரு. சிவப்பிரகாசத்தின் சேவைகளைப் பாராட்டிப் பேசினர்கள். (ந. நி.)

### கஷ்ட நிவாரணம்

மன்னார், சனி

சூறாவளியால் 1964ம் ஆண்டு பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு, சமூகசேவைத் துறை வாடிவீட்டில் நிதி உதவி வழங்கப்பட்டது. இச்சூறாவளியின் இலங்கையில் 116 மீனவர் உயிரிழந்தனர். இவர்களில் 58 பேர் மயிலிட்டி மீனவர்கள். சுமார் 32,000 ரூபாய் நன்கொடையாக வழங்கப்பட்டது. இச்சூறாவளியால் பாதிக்கப் பட்டவர்களுக்கு பிடிச் சங்கங்கள் நிதிதிரட்டி கொழும்பிலிருந்து மூவர் கொண்ட குழுவொன்றின் மூலம் அனுப்பியிருந்தன. அவர்கள் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேர்னன் அபயசேகரவின் அனுசரணையுடன் மயிலிட்டி மீனவர்களுக்குக் கையளித்துள்ளனர்.

### விற்பனைக்கு

காணியும் வீடும்:

நல்லூரில் 3 பரப்புக்காணி வீட்டோடு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சிவப்பிரகாசம் நாகலிங்கம், 34/5 செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.

2301

### கருவாட்டுக்குள் கற்கள்

சங்கானை, ஞாயிறு

சங்கானை கிழக்கைச் சேர்ந்த எஸ். குணபாலசிங்கம் என்பவர் சென்ற திங்கட்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள கருவாட்டுக்கடையொன்றில் 8 ரூத்தல் நெத்தோலிக் கருவாட்டை வாங்கி வந்து வீட்டில் காயவைப்பதற்கு அவித்துப் பார்த்தபோது சிறு சிறு கற்கள் அதிகம் இருப்பதைக் கண்டு அவற்றை வேறுக்கி நிறுத்துப் பார்த்தபொழுது கிட்டத்தட்ட அரை ரூத்தல் கருவாடே இருந்ததாம்.

### காலி மாநகரசபை நூற்றாண்டு

காலி, சனி

காலி மாநகர சபையின் நூற்றாண்டுவிழா இன்று கொண்டாடப்படுகிறது. இதனை முன்னிட்டு விசேஷ முத்திரையொன்றும் வெளியிடப்படவிருக்கிறது.

### பிரசாரக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியின் பிரசாரக் கூட்டம் திரு. இ. செல்லையா தலைமையில் மீசாலையில் நடைபெற்றது. சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், அரசாங்க அதிபர் ஆகியோர்களின் சேவையை திரு. இ. செல்லையா பாராட்டிப்பேசினார். திருவாளர்கள் அ. குமேந்திரம், கே. டானியல் ஆகியோரும் பேசினர். (ந. நி)

### "நாயை அனுப்புக"

யாழ்ப்பாணம், திங்.

பொலிஸ் இலாகாவுக்குச் சொந்தமான துப்பறியும் நாயொன்றை உடனே யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கும்படி வடமாகாண உதவி பொலிஸ் சுப்பிரிண்டன் கொழும்பு குற்றப்பகுதி பொலிஸ் சுப்பிரிண்டனுக்கு அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த நள்ளிரவு 1 மணிக்கு சாவகச்சேரியில் யாழ்ப்பாணம் கண்டி வீதியிலுள்ள வி. இராசையா என்பவரது வீட்டில் ரூபா 5, 070 பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளனவாம் களவுபோன வீட்டின் பின்புறத்தில் இனம் தெரியாத நபர் ஒருவரின் செருப்பும், இரத்தத்துளிகளும் இருந்தனவாம் இந்த அடையாளங்களைக்கொண்டு சம்பந்தப்பட்டவர்களை கண்டு பிடிக்கவே பொலிஸ் துப்பறியும் நாய் அழைக்கப்படவிருக்கின்றது. (ந. நி.)

# சுருட்டுத் தொழிலாளர் சங்கக் கூட்டம்

மானிப்பாய், ஞாயிறு

இலங்கை சுருட்டுத்தொழிலாளர்சங்க நிர்வாகக் கூட்டம் தாவடி சங்க காரியாலயத்தில் திரு சி. முதலியார் தலைமையில் நடைபெற்றது: திரு. சி. முதலியார் பேசுகையில் தொழிற்சங்க சட்டத்தின் 10-ம் பிரிவின் பிரகாரம் தமது சங்கம் பதிவுசெய்யப்பட்டுள்ளதென்றும், அதன் பதிவிலக்கம் 2697 என்றும் கூறினார்.

சுருட்டுத் தொழிலாளரின் சம்பளம் மாதமிருமுறை வழங்கப்படவேண்டுமென்றும், அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்ட கணக்குக் கொப்பிகளையே முதலாளிமார் வைத்திருக்கவேண்டுமென்றும் சேமலாப நிதி வழியாத முதலாளிமாருக்கு எதிராக அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் ... தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.


விற்பனையாகிறது!

"ஈழநாடு"

தினக்குறிப்பு

1967

புதிய அம்சங்களும் இணைந்து வழமையைவிட மேலும் சிறந்த முறையில் உருவாகியுள்ளது.

விலை: ரூபா 1-50

விற்பனையாளர்களுக்கு விசேஷ கழிவுண்டு. சொற்ப பிரதிகளே கையிருப்பில் இருப்பதால் விற்பனையாளர்கள் தாமதமின்றி உடனடியாகத் தொடர்புகொள்க.



THE JAFFNA ACADEMY

(Institute of Academic and Technical Education)

Chundikuli, Jaffna.

1967

Reopens on 11th. January 1967.

Admission on 9th. & 10th. January 1967.

Courses:

1. G. C. E. Ordinary Level - august & December 1967. Tamil & English.
2. University Entrance. G. C. E. (Advanced Level December 1967 & 1968.
3. Survey Draughtsmanship & Elementary Survey) Surveyor General's Exams May 1968.
4. Civil Draughtsmanship & Building Construction - City & Guild's Examination May 1968
5. Electrical Engineering Practice - Prelimenary - City & Guild's London Examination May 1968.
6. Electrical Engineering Practice - Intermediate - City & Guilds - London - May 1968.
7. G. A. Q. Examination 1968.
8. Law College Entrance 1967.
9. Special Practical classes from January to April for the University Entrance 1966 Students.

Practicals provided in all Science Subjects.

Tuition Classes can be arranged in individual Subjects.

Hostel accomodation available.

Highly qualified and experienced Staff.

Apply before 1st. January 1967 on forms obtainable in this office along with the Admission fee of Rs 25.

Prospectus available in the Office at -/50 cts.

J. C. Handy B. Sc. (Lond).
Director.

Jaffna.




கார், லொறி றெக்டர், லோஞ், தண்ணீர்பம் முதலியவற்றிற்கு

றீபோரிங், றீசிலிவிங், வால்(f) சீற் அடித்தல், வால்(f) சீற் வெட்டுதல், வால்(f) பேஸ் பண்ணுதல் முதலியவற்றிற்கும்

கார், லொறி, றெக்டர் ஆகியவைகளுக்கு

விசேஷ யந்திரங்கள் மூலம் பிறேக் றம், பிறேக் லைன், இளச் அசெஸ்மென்ட் செய்வதற்கும் மற்றும் சகல விதமான கடைச்சல்-புரி வெட்டுதல் போன்ற வேலைகளுக்கும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்!




நோத் எண்ட் மோட்டார் வேக்ஸ

(ஒட்டோமோபயில் என்ஜினியர்ஸ்)

291, ஸ்ரான்லி ரோட், — யாழ்ப்பாணம்.

(அ. சி. விஷ்ணுசுந்தரம் கட்டிடம்)


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஜனவரி 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org